யாருடைய வெளிப்புறத் தோற்றத்தையும் வைத்து அவர்களைத் தவறாக எண்ணக் கூடாது.உடல் பற்றை விடப் பயிற்சிகள் செய்வோம் உடலைப் பற்றி அதிகம் எண்ணவே மாட்டார்கள். முழுமையாகத் தன் சுய அடையாளத்தை நீர்த்துப் போகச் செய்யும் போதே பாவ பக்தியும், உண்மையான தெய்வ ப்ரேமையும் அதன் மூலம் தரிசனமும் ஏற்படும்.மிகவும் கற்றறிந்த சான்றோர் அடக்கத்துடனே இருப்பர்.

மாதவ் தாஸ் பிறப்பால் அந்தணர். சதுர் வேதியான இவர் மிகவும் அடக்கமானவர்.மிக எளிமையான உண்மையான பக்தியும் இல்லற தர்மமும் கொண்டு வாழ்பவர்.காலப்போக்கில் குழந்தைகள் இல்லாத குறை.அதைப் பற்றிக் கவலையே படவில்லை.மனிதனின் உண்மையான உறவு தெய்வமே என்பார்.அதே போல் அவர் மனைவியும் இறந்திவிட, சம்சார பந்தத்தை ஒழிக்க ஈசனே இயற்கையான வழி வகுத்தான் என்று மகிழ்ந்து பூரி மஹா திவ்ய க்ஷேத்ரத்தை அடைந்தார்.

**தீவினை களைந்த அன்பர்**

தான் ப்ராஹ்மணன், சதுர்வேதி, பாகவதன் என்ற எல்லைகளை எல்லாம் கடந்து தான் என்ற எண்ணத்தைக் கைகழிவி சதா ப்ரஹ்ம தத்வத்தைத் தன்னுள் உணர்ந்தவராக இருக்கிறார்.பூரியில் அவர் கடலில் குளித்தார்.அமைதியாக ஜகன்நாதரைக் காணக் கோயிலுக்குள் செல்லும் போது, அவரைக் கீழ்ச் சாதி என்று எண்ணி ஒதுக்கினர் பலர்.இதைத் தான் முன் ஜென்மத்தில் யாருக்கோ செய்த தீங்காக எண்ணி அமைதியாக இருந்தார்.தன்னை ப்ராஹ்மணன் என்று அவர் காட்டிக் கொள்ள விரும்பவில்லை.தன்னுள் இருக்கும் ஜகத் தத்துவத்தையே த்யானம் செய்து கொண்டு கோயிலின் வெளிப்புறத்தில் ஒதுங்கிக் கிடந்தார்.

**மஹாலக்ஷ்மி அளித்த பொன் வட்டில் உணவு**

நள்ளிரவில் ஒரு அம்மையார் அவரைத் தட்டி எழுப்பி உணவிட்டார்.அழகிய பொன் வட்டிலில் உணவு தரப்பட்டது.எதையுமே ஏற்கும் அவர் மனநிலை அமைதியாக அவ்வுணவை ஏற்றுக் கொண்டது.தட்டினைத் தர முற்பட்டபோது, அம்மையார் சென்று விடுகிறார்.அவரது விழிப்புணர்வில் ஸ்ரீதேவியே அம்மையாக வந்ததை உணர்ந்தார்.பரமாத்வாக்கு நன்றி கூறித் தூங்கினார்.

**ஜகன்நாதர் வாங்கிய அடி உதை**

மறுநாள் இவரிடம் பொன் வட்டில் இருப்பதை மடைப்பள்ளி பூஜாரிகள் கண்டு

அடித்து உதைத்து ஓர் அறைக்குள் கட்டி வைத்தனர்.சமாதி கதியில் எதையும் அறியாது சதா நிஷ்டையில் லயித்த அவரது அடிகளை ஜகன்நாதர் தன் தேஹத்தில் காயங்களாக உணர்த்தினார்.

**தூய பக்தியில் அத்வைத்த பாவத்தில் ப்ரஹ்மமும் நாமும் ஐக்யம் ஆகிய கதியில் இவை அனைத்தும் உலகில் எவருக்கும் ஏற்படும்.**

இவரது பெருமை உணர்ந்த பூஜாரிகள் இவரை விடுவித்துக் கோயிலில் தங்க ஏற்பாடு செய்தனர்.ப்ரசதாமே இவருக்கு உணவானது.தன் ஆன்மீக அனுபவங்களை வரும் அன்பர்களுக்கு அமைதியாக எளிமையாக இவர் விளக்கி வாழ்ந்து வழிகாட்டினார்.

**பட்டுச்சால்வை போர்த்திய பூரி தெய்வம்**

ஒரு மழைக்காலத்தில் இவர் சமாதி கதியில் குளிரில் துவள, ஜகன்நாதர் மீது சார்த்திய பட்டு சால்வை இவர் மீது பறந்து வந்து மூடியதை மக்கள் கண்டு அதியசித்தனர்.

இவரது பணிகளை, பக்தியை கவனித்த அரசன் ஒருவன் இவரைச் சரண் பற்றி ஆன்மீக வழியில் வாழ முற்பட்டான்.பின்னர் ஸ்ரீக்ருஷ்ண ஜன்ம பூமியான மதுராவிற்குப் பயணம் செய்தார் மாதவ் தாஸ்.

**மதுராவில் கிடைத்த பணிவிடை**

மதுராவிலும் இவரது வெளித்தோற்றத்தைக் கண்டு பூஜாரிகள் கோயிலை விட்டு வெளியில் தள்ளினர்.அன்று இரவு முதல் அவருக்குக் கடுமையான வயிற்றுப் போக்கும் ஏற்பட, இவர் அமைதியாக அதையும் ஈஸ்வரச் செயலாக ஏற்றுக் கொண்டார்.

இவரது நிலை உணர்ந்த ஒரு இளைஞன் இவருக்கு உணவும் மருந்தும் அளித்து, சத்திரத்தில் சேர்த்தான்.இவரது ஆடைகளை அலசிக் காய வைத்தான்.சில நாட்கள் இவர் குணம் ஆகும் வரை அருகில் இருந்து இவரைப் பற்றி அறிந்தான்.

**தர்க்கம் செய்த கண்ணன்**

ஜென்மாஷ்டமி நாளில் ஒரு தர்க்க நிபுணர் மிகவும் தன்னைப் பற்றி ப்ரலாபித்துக் கொண்டு மதுராவில் ரகளை செய்தார்.அப்போது அவ்விளைஞன் அவரை மாதவ் தாஸிடன் அழைத்து வந்து தர்க்கம் செய்யச் சொன்னான்.இருவரும் வாதம் செய்த போது, மீண்டும் உடல் அசதியால் மாதவ் தாஸ் தளர, இளைஞனே மீதி

தர்க்கத்தைச் செய்து அவன் ஆணவத்தை ஒழித்து விட்டான்.

அவனும் மதுரா நாயகனும் வேறில்லை என்பதை உணர்ந்தார் மாதவ் தாஸ்.பல காலம் மதுராவில் வாழ்ந்தார், சமாதி நிலையில் ப்ரஹ்மத்தை உணர்ந்து முக்தி அடைந்தார்.

ஹரி ஓம்!